Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.389/2025

Dated 15-12-2025
Deposition of witness for : PW 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | வயது | : | 24 |
| தந்தை பெயர் | : | பழனிசாமி | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | இருசக்கர வாகனம் விற்பனை |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present Counsel Present**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC No. 74663/2024 /F1/dt.21.2.2025 the Identity of the witness verified with their Identity card.**

**Aathar card of the Witness verified.**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். இருசக்கர வாகனம்

விற்கும் கடை வைத்து தொழில் செய்கிறேன்.

2) ஆஜர் எதிரியை தெரியும். இறந்துபோன திருவேங்கடத்தை எனக்கு தெரியும்.

3) இன்றிலிருந்து 5,6 மாதங்களுக்கு முன்பு திருவேங்கடம் இறந்துபோனதாக கேள்விப்பட்டேன். எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது.

4) போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியானர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின்படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

1)போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அப்போது 6.7.2025 ம் தேதி ஞாயிற்றுகிழமை காலை 11 மணியளவில் கடை வாடகை பணம் ரூ.12 ஆயிரத்தை அறிவழகன் மற்றும் திருவேங்கடத்திடம் கொடுக்க போனபோது வீட்டில் இருந்த திருவேங்கடத்திடம் பணத்தை கொடுத்துவிட்டு வந்தபோது எதிரில் ஆஜர் எதிரி அறிவழகன் வாடகை பணத்தை கேட்டார் என்றும்,

2) அதற்கு நான் இப்போதுதான் உன் தம்பி திருவேங்கடத்திடம் கொடுத்துவிட்டு வருவதாக சொன்னேன் என்றும்,

3) பிறகு திருவேங்கடத்தை அறிவழகன் அடித்து கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டு இரவு

வந்து பார்த்தாகவும் திருவேங்கடத்தின் பிரேதம் தஞ்சாவூர் TMCH சவகிடங்கில் இருப்பதாக கூறினார்கள் என்றும் திருவேங்கடமும், அறிவழகனும் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வார்கள் என சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்